★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

மலர்: 20 புரட்டாதி 11 ஷவ்வா: 23 இதழ்: 228
யாழ்ப்பாணம் புதன்கிழமை 27-9-78

யாழ். நகரில்
போட்டோஸ்டாற் பிரதிகள்
ஃ மிக மலிவாக ஃ அதிவிரைவாக
ஃ வெகு திறமாக ஃ தனிரகமாக
வெளிநாட்டுக் கடதாசியில்
புல்ஸ்காப் பிரதி ரூ. 1/50 மட்டுமே
சுப்பர் கனன்
கொப்பிசேவிஸ்
13, நவீன சந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

## காயா, புத்தகாயா வெள்ளப்பெருக்கு

பாட்னு. செப். 26
பீஹாரில் மீண்டும் வெள்ளஅபாயம் ஏற்பட்டுள்ளது. வடகிழக்கு இந்தியாவில் மீண்டும் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினல் புனித இடங்களான காயா, புத்தகாயா வெள்ளத்தில் மூழ்கியுள்ளன,

# அவசரகாலசட்ட அமுல்பற்றி முன்னுள் ஐ.ஜி.பி.

(கொழும்பு)
முன்னைய அரசாங்கத்தின் அரசியல் எதிரிகளின் நடமாட்டத்தையும். இவர்களின் பேச்சுச்சுதந்திரத்தையும் கட்டுப்படுத்த அவசரகாலச்சட்டம் பயன்படுத்தப்பட்டது என்று முன்னுள் பொலிஸ் மாஅதிபர் திரு. ஸ்டான்லி சேனநாயக்கா நேற்று ஜனதிபதி விசேஷ ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

''1971-ம் ஆண்டு இளைஞர்களின் கிளர்ச்சி முடிவடைந்ததும் அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்து அமுலில்வைத்திருக்க அவசியம் ஏற்படவில்லை. ஆனல் முன்னைய அரசு, பொலிஸாரின் ஆலோசனைகளை நாடாமல் அவசரகாலச் சட்டத்தை அமுலில்தொடர்ந்து வைத்திருந்தது'' என்று தெரிவித்த முன்னுள் பொலிஸ் மா அதிபர்.

''அத்தனகலையில் ஐ. தே. கட்சியினரின் சத்தியாக்கிரகம் அஹிம்சை முறையில் நடக்கும் என்று பொலிஸார் தெரிவித்ததை அன்றைய பிரதமர் ஏற்றுக்கொண்டபோதிலும், திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பொலிஸ்கூற்றை எதிர்த்து சிலபொலிஸாரின் உதவியுடன் தடைபோட்டார். சத்தியாக்கிரகத்தை தடைசெய்யுமாறு கேட்கப்பட்டதில் எந்தவித காரணமோ நியாயமோ இருக்கவில்லை'' என்று கூறினர்.

''முன்னுள் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன திரு. ஈ.எல். சேனநாயக்காவின் தாயின் மரணச்சடங்கில் கலந்து கொண்டுவிட்டு திரும்புகையில் அவர் பிரயாணம் செய்த காரை ஒரு கோஷ்டி தடுத்தது. அங்கே கூச்சலிட்ட ஒருவரை பொலிசார் கைதுசெய்தபோது

(6ம்பக்கம் பார்க்க)

''அரசைக் கவிழ்க்கும் ஆரம்பசதி,''

# ஜனதிபதி கூற்றுக்கு கூட்டுக்கமிட்டி மறுப்பு

(கொழும்பு)
''உத்தேச ஒருநாள் அடையாள பொதுவேலை நிறுத்தம், அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் ஆரம்ப சதிமுயற்சி என்று ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்திருப்பதை கடுமையாக நாம் மறுப்பதுடன், எமது அடையாள வேலைநிறுத்தம் குறித்து ஜனதிபதி தெரிவித்திருக்கும் இக்கூற்றை வன்மையாகக் கண்டிக்கின்ருேம்'' என்று தொழிற்சங்கங்களின் கூட்டுக் கமிட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பொதுவேலைநிறுத்த முடிவை மேற்கொண்ட பதினேழு தொழிற்சங்கங்கள், சம்மேளனங்களின் கூட்டுக்கமிட்டி, பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து உத்தேச பொது வேலைநிறுத்தம்பற்றி அறிவித்ததும் அரசு, எமது கோரிக்கைகளை நியாயமான முறையில் அணுகுவதைத் தவிர்த்து, தொழிலாளர்களின் ஒற்றுமையை நசுக்கும்விதத்தில் முன் எப்பொழுதுமே இல்லாதமாதிரி தடைமுயற்சிகளை மேற்கொண்டு, வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோர் தங்களது வேலையை இழந்தவர்களாகக் கருதப்படுவார்கள் என்று அறிவித்து, அரசு கூட்டுஸ்தாபன, தனியார் துறை ஊழியர்கள் — தொழிலாளர்கள் பயமுறுத்தப்பட்டனர், வேலைத்தலங்களுக்கு அண்மையில் கூட்டங்கள் நடத்துவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டு, தடைவிதிக்கப்பட்டது.

''முக்கிய தொழிற்சங்கவாதிகள், தூரஇடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்'

''அரசாங்கத்தின் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கைகளை நாம் கண்டிக்கின்ருேம். தங்களுக்கு சார்பாக அரசு, வானெலியையும் பத்திரிகைகளையும் பாவித்ததையும் கண்டிக்கின்ருேம். அரசைக்கவிழ்க்கும் ஆரம்பசதியே இந்த வேலைநிறுத்தம் என்று ஜனதிபதி தெரிவித்த கூற்றை நாம் மறுப்பதுடன் கண்டிக்கின்ருேம்.

''அரசாங்கத்தின் இவ்வித நடவடிக்கைகள் காரணமாக, உத்தேசபொதுவேலைநிறுத்தத்தில், அரசாங்க ஊழியர்கள், தொழிலாளர்கள் சுயேச்சையாகக் கலந்துகொள்வது சாத்தியமாகாது என்பதை கூட்டுக்கமிட்டி உணருகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

## வேலைநிறுத்தம் வாபஸ்: அமைச்சர் மகிழ்ச்சி

(கொழும்பு)
இம்மாதம் 28ந் திகதி நடைபெறவிருந்த உத்தேச அடையாள வேலைநிறுத்தத்தைக் கைவிடுவதெனத் தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டி தீர்மானித்துள்ளதை தொழிலமைச்சர் காப்டன் சி. பி. ஜே. செனவிரத்ன வரவேற்றுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது;

''தொழிலாளர்கள், சுயநலம் மிக்க அரசியல்வாதிகளால் வழிநடத்தப்படும் இயக்கங்களில் ஈடுபடாது, அரசின் அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்த உதவவேண்டும்.

''தொழிலாளர்கள், வேலைநிறுத்தம் போன்ற வீண் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, தமது பிரச்னைகளைச் சமரசப்பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக்கொள்ளவேண்டும்.

''தொழிலாளர்களின் பிரச்னைகளைக் குறுகிய காலத்தில் தீர்க்க அரசு தீர்மானித்துள்ளது. எனவே, அரசுக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் தொழிலாளர்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளவேண்டும்.'' (இ)

## சம்பந்தமூர்த்தி ரூ.1000 சரீரப்பிணையில் விடுதலை

[மட்டக்களப்பு]
கடந்த 22ம் திகதி மட்டக்களப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் சரணடைந்த திரு. சி. சம்பந்தமூர்த்தி, நேற்று ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுதலைசெய்யப்பட்டார்.

அக்டோபர் மாதம் 23ம் திகதி நீதிமன்றத்தில் திரு. சம்பந்தமூர்த்தி மீண்டும் ஆஜ

(6 ம் பக்கம் பார்க்க)

## ஒத்திவைப்பே தவிர வாபஸ்பெறவில்லை!
### தொழிற்சங்கக் கூட்டத்தில் பண்டித

(கொழும்பு)
''பொது வேலைநிறுத்தத்தை ஒத்திவைத்துள்ளோமே தவிர, வேலைநிறுத்தத்தைவாபஸ்பெறவில்லை'' என்று நேற்று முன்தினம் ஹைட் பார்க் மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் திரு. எல். டபிள்யு பண்டித பேசுகையில் தெரிவித்தார்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்து அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ''அரசு இந்த வேலைநிறுத்தத்தை யுத்தமாகப் பிரகடனஞ்செய்துள்ளது. அடையாள வேலை நிறுத்தமொன்றை இப்படியான அடக்குமுறைகளால் மடக்குவது வேடிக்கையாக உள்ளது. தொழிலாளர்களை அடக்குவதற்குத் தார்மீக அரசு முப்படைகளையும் சேவைக்கு அழைத்துள்ளது. இந்நிலையில் அரசுக்குத் தகுந்த பாடம் ஒன்றைப் புகட்ட வேலைநிறுத்தத்தை ஒத்திவைத்துள்ளோம்'' என்ருர்.

''பேச்சுவாத்தை நடத்துமாறு கோரி, தார்மீக அரசுக்குக் கடிதம் அனுப்பினேம். அரசு எந்தவித பதிலும் அனுப்பவில்லை. ஆனல் வெளிநாட்டுப் பிரதிநிதி ஒருவர், வேலைநிறுத்தம் பற்றித் தந்தி கொடுத்தபோது அதற்கு ஜனதிபதி கொடுத்த பதிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது'' என்றும் திரு. பண்டித கூறினர்.

ஜனப் அலவி மௌலான பேசுகையில், ''இன்று தொழிலாளி வர்க்கம் தார்மீக அரசை இனம் கண்டுவிட்டது'' என்ருர்.

திரு. பட்டி விரக்கோன் பேசுகையில், இந்த அரசின் அடக்குமுறைகளைக் கண்டு நாம் அஞ்சப்போவதில்லை. ஆனல் எம்மைக் கண்டு அரசு அஞ்சுகிறதோ தெரியவில்லை'' என்ருர். (ம)

# பாண்டிச்சேரி அமைச்சரவை மயிரிழையில் பிழைத்தது!

புதுச்சேரி, செப். 26
பாண்டிச்சேரி சட்டசபையில் இன்று நடத்தப்பட்ட பலப்பரீட்சையில், அ இ.அ. தி. மு. கழக அமைச்சரவை மயிரிழையில் பிழைத்தது.

திரு. எஸ். இராமசாமியின் தலைமையிலான பாண்டிச்சேரி அமைச்சரவைக்கு நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் இன்று சட்டசபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபொழுது, ஆதரவாகப் பதினைந்து பேர் வாக்களித்தனர். (இவர்களில் மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினர் ஒருவரும் அடங்குவார்.) எதிர்க்கட்சியில், பதினன்கு உறுப்பினர்கள் சமுகமளித்திருந்தும் ஒருவரும் வாக்களிக்கவில்லை. சபாநாய

[6ம் பக்கம் பார்க்க]

## வீரமணி இன்று பேச்சு
### கூட்டணி எம்.பி.க்களும் கலந்துகொள்வார்கள்

(யாழ்ப்பாணம்)
திருக்குறள் முன்னணிக் கழகத்தின் ஆதரவில் நடைபெறும் பெரியார் ஈ. வே. ரா. நூற்ருண்டு விழாவும் தீண்டாமை ஒழிப்பு பிரசாரக் கூட்டமும் இன்று மாலை யாழ். திறந்தவெளி அரங்கில் நடைபெறவிருக்

[6ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலியில் தம்பசிட்டிப் பகுதியில் பத்துப் பரப்புத் தோட்டம் செய்யக்கூடிய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இரா புவனேந்திரன், பருத்தித்துறை வீதி, பூதர்மடம், கோப்பாய் வடக்கு. 0420

சுரம்பொன் சின்னமூளாய் ஆஸ்பத்திரிக்கு அருகாமையிலும் பெரியதெரு முன்பக்கமும் உள்ள 16 பரப்புக்காணி. தொடர்பு கொள்ளவும். டாக்டர் பாலசுப்பிரமணியம், அரசினர் வைத்தியசாலை, ஊர்காவற்றுறை. 0423

### தேவை

வார்னிஸ், பேக்கிங்பவுடர், கற்பூரம், ஓடிக்கொலோன், ஊதுபத்தி, வாசனைச் சோப், சலவைச்சோப், பற்பொடி, கிறீம், வசிலின், இன்னும் பல கைத்தொழில் தெரிந்தவருக்கு வேலை தேவை விண்ணப்பிக்கவும், விளம்பர இல: 0413, மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 0413

புதிய பனை ஓலைச் சார்வு தேவை. மில்க்வைற் - யாழ்ப்பாணம். 0424

யாழ். விற்பனைத் திணைக்கள காரியாலயம் அமைப்பதற்கு யாழ். மாநகர எல்லைக்குள் சுமார் 2000 சதுர அடி விஸ்தீரணமான கட்டிடம் வாடகைக்கு தேவை, 30-9-78க்கு முன் தொடர்பு கொள்க. உதவி ஆணையாளர், விற்பனைத் திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 249. 0426

தகடு வெட்டுவதில் அனுபவமுள்ள ஒருவர் தேவை. நேரில் வரவும். அன்ரன்ஸ் றபர் சீல், வீட்டுப் பெயர் செய்யுமிடம், 91 மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 0427

### பயிற்சி

(Electric & Gas) எலக்ரிக் காஸ்வெல்டிங், லேத் இயக்குநர் (Lathe operator) மூன்று மாதகால அடிப்படை பயிற்சி வகுப்புக்கள் அக்டோபர் மாதம் முதல் நடத்தப்படும். பயிற்சிக்காலத்தில் திறமையான தகுதியுடையோருக்கு பயிற்சியின் பின் இலவசமாக தொழிற்சாலையில் மூன்று மாதகாலம் விசேட பயிற்சி அளிக்கப்படும். அனுபவமிக்க பொறியியலாளர்கள் பயிற்சி வகுப்புக்கள் நடத்துவார்கள். 30-9-78-ற்குமுன் விண்ணப்பிக்கவும். இன்டஸ்றியல் என்ஜினியரிங் இன்ஸ்ரிரியூட், C/o ராதா மெஷின் கம்பனி, 95 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0375

Co-operative Hospital
Society Ltd,
Moolai, Chulipuram.
Vacancies for

**Matron and Qualified Nurses**

Applications are invited for the above vacancies. Closing date 10 - 10 - 78. Please apply to the President. Salaries negotiable.

0425 President.

**கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**
ஒட்டுதல், பொருத்துதல், மின்சார வயறிங்
(WELDING, FITTING)
**முழுநேர வகுப்புகள்**

காலை 8-12 மணி வரை மேற்படி வகுப்புகள் ஒக்டோபர் 2-ந் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. க. பொ. த/தே. பொ. த. வகுப்புகளில் விஞ்ஞானம், கணிதம், வர்த்தக கணிதம், எண் கணிதம் ஏதாவது ஒரு பாடத்தில் சித்தி பெற்றோர் உடனே பின்வரும் சான்றிதழ்களுடன் அதிபரைச் சந்திக்கவும்.

1. கல்விச் சான்றிதழ்
2. பாடசாலை விடுமுறைப் பத்திரம்
3. நற்சாட்சிப் பத்திரம்

ஒட்டுதலும் பொருத்துதலும் மாதமொன்றிற்கு (Welding and Fitting) ரூபா 15/-
வயறிங் - ரூபா 5/-
0421 அதிபர்.

## முதலாவது நினைவாஞ்சலி

**ஸ்ரீமான் ஆறுமுகம் பசுபதி**
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

மறைவு : 23-9-77 நினைவுதினம் : 27-9-78

''சிந்திக்கச் சிந்திக்க எம்சிந்தை
நொந்திடவே விண்ணகம் ஏகிய
உத்தமரே! உம் ஆத்மா சாந்தி
அடைய வேண்டுகின்றோம் ''

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவிகள் செய்த அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகுக

திருமதி சரஸ்வதி பசுபதி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.
0429

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
வழ. இல: M B/1893
ஆறுமுகம் சுவாமிநாதன்
மல்லாகம்.
வழக்காளி
எதிராக
பொன்னையா இராமசாமி, தெல்லிப்பளை.
தற்பொழுது பெரிய வளவு, புலோலி கிழக்கு, புலோலி.
எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் M B/1893-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1978-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23-ந் திகதி திங்கட்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் (23-10-78) அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 8869-50வும் மேலும் ரூபா 4500/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1977-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1978-ம் ஆண்டு பங்குனி மாதம் 17-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 626-30 கொடுக்க வேண்டியிருப்பதாலும்.

### ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று தெல்லிப்பழை கிழக்கு இறை சஞ்சலனை நில. பரப்பு 24 இதில் கிணற்றுப் பாவிப்புக்குரிய நிலம் குழி 2ல் கையொழுங்கை பாவிப்பிற்குரிய நிலம் குழி 1¾யும் நீக்கி மிகுதி வடக்கரை வாசிக்குரிய நிலப்பரப்பு 11 குழி 16¼ தென்னைகள் பலாமரங்களும் புளியமரமும் இந்நிலப்பரப்பு பதினொன்று குழி பதினேறேகாலுக்கும் எல்லை கிழக்கு கொல்லன் குருநாதனுக்கும் மறுபேருக்குமுரிய காணி, வடக்கு எதிராளிக்கும் மறுபேருக்குமுரிய காணி மேற்கு பத்மநாதன் பெண் தங்கரத்தினத்திற்கும்மறுபேருக்குமுரிய காணி, தெற்கு எதிராளியின் தாயாரான செல்லம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய காணி இதிற் சொரியலாய் நாலிலொரு பங்கில் ஆறிலொரு பங்கும் கிணற்றுப் பாவிப்பு நிலத்திலும் வழிநிலத்திலும் இதற்குரிய பங்கும்.

2. மேற்படி இறை சன்சலானை நிலப்பரப்பு 3 குழி 10·5 இதில் 1937-ம் ஆண்டு வைகாசி மாதம் 15-ந் திகதி நில அளவையாளர் என். பொன்னம்பலத்தால் 50-ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்டதும் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 797-ம் இலக்க பிரிவிடுதல் வழக்கில் அணைக்கப்பட்டதுமான படத்தில் 3-ம் நம்பர் துண்டு இதில் நிலப்பரப்பு 1 குழி 12·5 வீடுகளும் இந்த நிலப்பரப்பு ஒன்று குழி பன்னிரண்டு தசம் ஐந்துக்கும் எல்லை கிழக்கு செல்லையா கந்தசாமி பெண் இராசமணிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும் குறித்த படத்தில் சொல்லிய 2-ம் நம்பர் துண்டு தூர்வை நிலமும், வடக்கு குறித்த தூர்வை நிலமும் குறித்த படத்தில் வழிவாய்க்காலுக்காக விடப்பட்ட 1-ம் நம்பர் துண்டும், மேற்கு இராமசாமி பெண் செல்லம்மாவுக்குரிய குறித்த படத்தில் 4-ம் நம்பர் துண்டு தெற்கு ரோட்டு இவ்வெல்லைப்படி இதடங்கலும் 2ம் துண்டில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

சி. செ. பாலசிங்கம்,
கொமிஷனரும் மதிப்பாளரும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை,
10-9-78.
0422


மீன்பிடி, பண்ணைத்தொழில் மூலம்

# இளைஞர்கள் அதிக வருமானம் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

''படித்த வாலிபர்கள் இன்று அரசாங்க உத்தியோகங்களையும், மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புக்களையும் பெறுவதற்காக அலைந்துகொண்டு தமது வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்கும் தொழிலை மேற்கொள்ளவோ, குடும்பத் தொழிலில் உதவி செய்யவோ பின்னிற்கின்றார்கள்; இழிவு எனக் கருதுகின்றார்கள். நாட்டில் வேலையின்மை பெருகிவரும் வேளையில் அதிக வருமானம் தரக்கூடிய மீன்பிடி மற்றும் பண்ணைத் தொழில்களில் ஈடுபடாது இருப்பது இளைஞர்களின் போலிக் கௌரவத்தையே உணர்த்துகின்றது ''

இவ்வாறு பாஷையூர் கடற்றொழில் அபிவிருத்தி இளைஞர் சங்கத்தினை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் யாழ். மீன்பிடிப் பரிசோதகர் திரு. வி. பிலிப் கூறினார். மேற்படி சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் வண. பிதா. அன்ரன் மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

''படித்த இளைஞர்கள் மக்கும், தமது குடும்பத்திற்கும், தமது தாய் நாட்டுக்கும் பயனற்றவர்களாக வீண் காலம் கழிப்பதைவிட்டுத் தமக்கும் தமது குடும்பத்திற்கும், தாய் நாட்டுக்கும் முன்னேற்றம் ஏற்படும் வகையில் மீன்பிடித்தல், பண்ணைத் தொழில் போன்ற தொழில்கள் மூலமாக அதிக வருமானம் தேடிக் கொள்ள முடியும். இதற்கு முன்னோடிகளாக கிராமிய கடற்றொழில் அபிவிருத்திக்கு வழிவகுத்துள்ளார்கள் இந்த கடற்றொழில் அபிவிருத்தி இளைஞர் சங்கத்தினை உருவாக்கியுள்ள இளைஞர்கள்'' என்று வண. பிதா. அன்ரன் தமது தலைமையுரையில் கூறினர்.

மேற்படி இளைஞர் சங்கத்தினர் இலங்கை கிராமிய மீளமைப்பு நிறுவனம், யாழ். லயன்ஸ் கழகம், நோர்வே தேசத்து நல்லெண்ண இளைஞர் இயக்கம் ஆகியோரின் நிதியுதவியுடன் ஆழ்கடல் மீன்பிடி முறையில் ஈடுபடுதல், தமது கிராமத்து மீனவர்களுக்கு நவீன மீன்பிடி முறையை அறிமுகம் செய்து வைத்தல், புதிய முறைகளில் மீன்களைச் சந்தைப்படுத்தல் போன்ற வழிகளாலும், வேலையில்லாது இருக்கும் தமது கிராமத்து இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மூலமும் கிராமிய மீனவர்களுக்கும் இளைஞர்களுக்கும் வருமானத்துக்கான அபிவிருத்திகளை மேற்கொள்ளும் செயல் திட்டங்களை இக் கூட்டத்தில் எடுத்துக் கூறினார்கள்.

சங்க உத்தியோகஸ்தர் விபரம் வருமாறு:-

போஷகர்கள்: திரு. வெ. யோகேஸ்வரன் எம். பி., வண. பிதா. ஜே. பி. தேவராஜா. தலைவர். ஜி. இம்மானுவல்: செயலாளர்: பி. வின்சென்ற். பொருளாளர்: ஜே. ஏ. கிறேவின். ஐவர் கொண்ட ஆலோசனைச் சபையும், ஒன்பது பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் அமைக்கப்பட்டது. (ஊ-அ)

# அக்கா ஏசினாராம் இளம்பெண் தற்கொலை

(நெல்லியடி)

மூத்த சகோதரி ஏசியதைப் பொறுக்க முடியாத இளம் பெண் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார். மேற்படி சம்பவம் கெருடாவில் தொண்டமானாறு பகுதியில் நடைபெற்றுள்ளது.

தம்பிப்பிள்ளை விமலேந்திராணி என்பவரே இவ்வாறு மரணமானவராவார். இவரது மரணவிசாரணை மந்திகை அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்றது. வடமராட்சிப்பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வீ. புவனேந்திரன் மரண விசாரணையை நடாத்தினர். பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஆனந்த பண்டா வீரசேகரா சாட்சிகளை ஆஜர் செய்தார். மரணவிசாரணையின்போது காலஞ்சென்றவரின் சகோதரி சுசிலேந்திராணி தெரிவித்ததாவது:-

''நாங்கள் நால்வர் சகோதரர்கள். காலஞ்சென்றவர் மூன்றாவது பிள்ளை, எமக்கு தாயாரில்லை. சம்பவதினம் எமது தாயாரின் திவசம். நான் மூத்த பிள்ளையானதால் தாய்க்குத் தாயாக இருந்து வந்தேன். திவசத்தன்று வீட்டைக் கழுவிவிட்டு தண்ணீர் எடுக்க சுமார் 200 யார் தூரம் செல்லவேண்டியிருந்தது. நித்திரையிலிருந்த காலஞ்சென்றவரை எழுப்பி பாத்திரங்களை கழுவுமாறு கூறிவிட்டு தண்ணீருக்குப் போனேன் தண்ணீர் கொண்டுவந்த பின்பும் சகோதரி முற்றத்தில் இருந்தார். ஏன் வேலையைச் செய்யவில்லை என்று ஏசியபடி வீட்டிற்குள் போனேன். வெளியே வந்தபோது காலஞ்சென்றவர் எதையோ குடித்தார். நாங்கள் உடனடியாக தேங்காய்ப்பால் பருக்கினோம். அவர் திமிறினர், அதனால் தலையில் காயமேற்பட்டது. பின்பு மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம்.

(6-ம் பக்கம் பார்க்க)


திருக்குறள் முன்னணிக்கழகம்
எடுக்கும்
பெரியார் ஈ. வெ. ரா.
**நூற்றாண்டு விழா**
யாழ். திறந்தவெளி அரங்கு
27-9-78 புதன் மாலை 5-45
சிறப்புரை:
தமிழகத்தில் இருந்துவந்த
திராவிடக்கழக பொதுச்செயலாளர்
கடலூர் கி. வீரமணி (M. A., B. L)
அனைவரும் வருக.
0428 ---திருக்குறள் முன்னணிக்கழகம்

ஈழநாடு
The Eelanaadu

## விவேகமான முடிவு

நாளை நடாத்தப்படவிருந்த ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தை காலவரையறையின்றி ஒத்திவைப்பதென தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டியின் நடவடிக்கைக் குழு செய்துள்ள முடிவு வரவேற்கத்தககது மட்டுமின்றி விவேகமானதுமாகும்.

அடையாள வேலைநிறுத்தத்தை ஒத்திவைப்பதென்று முடிவு செய்த நடவடிக்கைக்குழு சூழ்நிலைக்கேற்ப பின்னர்திடீரென வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்துவது எனவும் தீர்மானித்திருக்கிறது.

அடையாள வேலைநிறுத்தத்தைக்கைவிட்டதற்கான காரணத்தை நடவடிக்கைக் குழு தெரிவிக்கவில்லை.

இந்த ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தை பதினேழுபிரதான தொழிற் சங்கங்கள் மேற்கொள்ளவிருந்தன. நமது நாட்டில் பல தொழிற்சங்கங்களிருக்கின்றன. ஒருதொழிலுக்கே பல தொழிற் சங்கங்கள் இங்கு இருக்கின்றன. தொழிற் சங்கங்கள் பலவும் அரசியல் கட்சிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இயங்குகின்றன. இதனால் போட்டித் தொழிற் சங்கங்கள் உருவாகி தொழிலாளர்களுக்கிடையிலேயே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டு மண்டைகள் உடைந்திருக்கின்றன; உயிர்ப்பலியும் ஏற்பட்டிருக்கின்றது. இன்றும் தொழிற் சங்கங்களுக்கிடையில் பலத்த போட்டி நிலவுகிறது. இந்த நிலையில் தொழிலாளரிடையே சரியான ஒற்றுமை இருக்கிறதென்று சொல்ல முடியாது. அடையாள வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளப் போவதில்லையென்றும் அரசியலில் செல்வாக்கிழந்தவர்கள் மீண்டும் செல்வாக்குத் தேடும் அரசியல் நோக்கத்தைக் கொண்ட இதில் தாம் பங்குபற்ற முடியாதென்றும் வேறு பல தொழிற் சங்கங்கள் அறிகைகை விடுத்திருந்தன.

இந்த வேலை நிறுத்தம் அரசியல் நோக்கமுடையதென்றும் அரசாங்கத்துக்கெதிரான முதல் சதிமுயற்சியென்றும் அரசாங்கம் அறிவித்ததுடன் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டு 28ந் தேதி வேலைக்கு வராத ஊழியர்கள் வேலையிலிருந்து விலகிக்கொண்டதாகக் கருதப்பட்டுப் புதிய ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவார்களென்றும் தெரிவித்திருந்தது. இதனல் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்வதற்குப் பல ஊழியர் தயக்கமடைந்தனர்.

இந்தக் காரணங்களினுல் அடையாள வேலை நிறுத்தம் நடைபெற்ருலும் அது எதிர்பார்த்தளவுக்கு வெற்றியளித்திருக்குமா என்பது சந்தேகமே.

இவை தவிர இந்த அடையாள வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்துப் பின்னணியிலிருந்த தலைவர்கள் முன்னர் ஆட்சிபீடத்திலிருந்தவர்களென்பதும் அந்த ஆட்சிக்காலத்திலும் ஊழியருக்கும் பொதுமக்களுக்கும் கஷ்டம் இருந்ததென்பதையும் ஊழியர்களும் பொதுமக்களும் மறந்துவிடவில்லை.

எந்தப் பிரச்னையையும் பேச்சுவார்த்தைமூலம் தீர்க்கமுன்வர வேண்டும்.

வேலைநிறுத்தம் என்பது கடைசி ஆயுதம்.

வேலை நிறுத்தத்தினுல் பொது மக்களே பெரிதும் பாதிக்கப்படுவர். இது கடந்தகால அனுபவம். இதனுல் இந்த அடையாள வேலைநிறுத்தத்துக்கும் பொது மக்களின் ஆதரவு இருந்ததாகத் தெரியவில்லை மக்களின் ஆதரவும் அனுதாபமும் இல்லாத எந்த வேலைநிறுத்தமும் வெற்றியளிக்க முடியாது.

எனவே வேலைநிறுத்தத்தைக் கைவிடுவதென்ற தொழிற் சங்கக் கூட்டுக் குழுவின் முடிவு விவேகமான சமயமறிந்து மேற்கொண்ட சரியான முடிவாகும்.

# "பெரியார் கொள்கைகள் இலங்கைக்கும் தேவையே"

## கடலூர் வீரமணி கருத்து

(பொரளை)

பெரியாருடைய அடக்கம் இன்றைய இளைஞர்கள்பின்பற்றவேண்டிய ஒன்ருகும். சிக்கனக்காரரர்கவே வாழ்ந்து பொதுத்தொண்டிற்குத் தம்மால் முடிந்தவரை பாடுபட்டவர் பெரியார். இறுதிக்காலம் வரை தொண்ணூற்றைந்து வயது வரை அவர் ஓர் இருபத்தைந்து வயது இளைஞரைப் போல் ஆழ்ந்த நினைவாற்றலுடன் வாழ்ந்தவர் பெரியார்"

மேற்கண்டவாறு தமிழ் நாடு திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கடலூர் கி. வீரமணி நமது நிருபருடன் உரையாடியபோது தெரிவித்தார்.

கொழும்பில் கலைஞர் கருணநிதி பொதுப்பணிமன்றத்தின் சார்பில் நடைபெற்ற பெரியார் நூற்ருண்டு விழாவில் கலந்துகொள்வதற்காக திரு. வீரமணி இலங்கை வந்தது தெரிந்ததே.

திரு. வீரமணி தமது உரையாடலில் தொடர்ந்து கூறுகையில்,

"பெரியாரின் சிறப்பைப் போற்றும் வகையில் இந்திய மத்திய அரசு அவருக்கு அஞ்சல் தலை வெளியிட்டுக் கௌரவித்துள்ளது. இதுவரை 30லட்சம் தபால் தலையே பொதுவாக வெளியிடப்படுவதுண்டு. ஆனுல்பெரியாருக்கு 50லட்சம் தபால் தலைகள் வெளியிடப்பட்டுள்ளன. 17ந்திகதி பெரியார் பிறந்த ஊரான ஈரோடிலும் வாழ்ந்து மறைந்த ஊரான சென்னையிலும் இது வெளியிடப்பட்டது" என்ருர்.

### தமிழக அரசியல் பற்றி...

தமிழக அரசியல் நிலையைப் பற்றிக் கேட்டபோது எமது திராவிடர் கழகம் ஒரு சமூக சீர்திருத்த இயக்கம். அரசியலுடன் சம்பந்தமில்லாதது. எனவே அரசியல் கட்சிகளைப் பற்றிய கருத்துகளை நான் சொல்ல முடியாது உள்ளது" என்ருர் வீரமணி.

"தமிழ் நாட்டில் தந்தை பெரியாரது கொள்கைகளுக்கு எந்த அளவில் தேவை உள்ளதோ அதே போன்ற தேவை இலங்கையிலும் உள்ளது என்பதை நான் உணருகிறேன். இங்கும்சாதிக்கொடுமை மனிதனை மனிதன் பிரித்தா முதல் ஆதிக்கச் சக்திகளின் சூழ்ச்சிகள் என்பன இருப்பதால் சாதியற்ற மூடநம்பிக்கை அற்ற சமத்துவம் பொங்கும் சமவாய்ப்புள்ள ஒரு புதிய சமுதாயததை அமைக்க கட்சி வேறுபாடு இன்றி, மக்கள் ஒன்ருக வேண்டும் என்ற செய்தியை இதற்காகப் பாடுபட்ட பெரியாரது நூற்ருண்டு தினத்தில் தெரிவிககவிரும்புகிறேன்" என்று அவர் சொன்னுர். (அ)

## 'கற்றகல்வி பிறருக்கும் பயன்படவேண்டும்'

(யாழ்ப்பாணம்)

தாம்கற்ற கல்வியைப் பிறர்க்கும் பயன்படும் முறையில், சேவையாற்றும் உண்மைத் தொண்டர்கள், கடவுளின் குழந்தைகள். அவர்களுக்கே, இயேசு சகல கிருபைகளையும் வழங்குவார்.' என, வண. பிதா குரூஸ், புதிய 'கணிதப் பயிற்சி' என்னும் நூலை வெளியிட்டுவைத்துப் பேசுகையில் கூறினர்.

இவ்விழா நாரந்தனை சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில், நாரந்தனை ரோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் திரு. அ. சிங்கராயர் தலைமையில் நடைபெற்றது.

வண. பிதா குரூஸ் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது, 'இந்நூலின் ஆசிரியர், ஊதியத்துக்காக மட்டும் சேவையாற்ருது, எதிர்கால சமுதாய நல்வாழ்விற்காகவும், பலநூல்களை லாபநோக்கின்றி வெளியிட்டு வருகிருர். பாடசாலைகளில் நாம் கற்றதையெல்லாம் அடியோடு மறந்து போனபிறகு எஞ்சிவது தான் கல்வி என்பதை மறந்துவிடக்கூடாது' என்ருர்.

திரு. அ. சிங்கராயர் உரையாற்றுகையில் கூறியதாவது, 'நூல்களை உருவாக்குவது சுலபமானது. மற்ருேரின் விமசனத்திற்கு ஈடுகொடுக்ககூடிய திறமையான நூல்களை வெளியிடுவது ஒருசிலருக்கு மட்டும் இறைவன் கொடுத்த கொடையாகும், இந்தவகையில் நூலாசிரியர் திரு. எம். ஸ்ரீதரன் குறிப்பிட்டுள்ளார் என்ருர்.

விழாவில் நூலாசிரியர் எம். ஸ்ரீதரன், எஸ். சத்தியமூர்த்தி உட்பட பலர் உரையாற்றினர். (கெ-உ)

### மணிவாக்கு

கடவுளை அடையத் தீவிர ஏக்கம் கொள்.

- ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி.

## குடிநீர் தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக கிளிநொச்கியின் பல பாகங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வட்டக்கச்சி, இராமநாதபுரம், கனகபுரம், திருநகர், ஜெயந்திநகர், உருத்திரபுரம், போன்ற பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வட்டக்கச்சி மேற்கு கிராம முன்னேற்றச் சங்கம், வட்டக்கச்சி குடிநீர் தட்டுப்பாட்டை சுட்டிக்காட்டி நிவாரணம் வழங்குமாறு யாழ். அரசாங்க அதிபரை அவசரத் தந்திமூலம் கேட்டுள்ளது. (க)

## இலங்கை ஆசிரியர் சங்கம் தீர்மானம்

(பருத்தித்துறை)

இவ்வருடம் நிகழவிருக்கும் கடன்சபை உத்தியோகத்தர் தெரிவில் இலங்கை ஆசிரியர் சங்கம் பங்குபற்றுவதில்லை எனத் தீர்மானித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் திரு. எச். என். பெர்ஞண்டோ இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

கடந்த காலங்களில் எமது சங்க அங்கத்தவர்கள் விசுவாசத்துடனும் பற்றுடனும் கடன்சபைகளில் பணியாற்றியுள்ளார்கள். ஊழல்களுக்கும் குறைபாடுகளுக்கும் எதிராகப் போராடியுள்ளார்கள். எனினும் கடன்சபைகள் ஊழியர்களைக் கடன் பளுவில் இருந்து காப்பாற்ருது அங்கத்துவ நிதியிலிருந்து அரசையே கடனில் இருந்து காப்பாற்றி வந்துள்ளது மேலும் சில கடன்சபை உத்தியோகத்தர்களின் ஊழல்களினுலும் குறைபாடுகளினுலும் நேர்மையாகப் பணியாற்றும் எமது அங்கத்தவர்கட்குக் களங்கமே ஏற்பட்டுள்ளது

இவற்றைக் கருத்திற்கொண்டு பார்க்கையில் எமது அங்கத்தவர்கள் கடன்சபையில் பணியாற்றவதனுல் ஆற்றக்கூடிய சேவை மிகவும் அற்பமானது என்பதனலேயே நாம் கடன்சபைத் தேர்தல்களில் பங்குபற்றுவதில்லையெனத் தீர்மானித்துள்ளோம்" என்ருர். (உ)

## "பெரியாரை மறக்காத ஈழத்து மக்கள்"

### நூற்ருண்டுவிழாவில் வீரமணிமகிழ்ச்சி

(கொழும்பு)

மறைந்த தமிழ்த் தலைவர், தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமிழ்நாட்டுக்கு வருகைதந்தபோது, அவரைப் பெரியார் ஈ. வே. ரா. அன்புடன் வரவேற்ற காட்சியை நான் உடனிருந்து கண்டேன். ஆனுல் இன்று இலங்கையில் அந்தப்பெரியாரை- தந்தை செல்வாவைக் காண முடியவில்லை என்று மனவேதனையில் தவிக்கின்றேன்."

இவ்வாறு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற பெரியார் ஈ. வே. ரா. நூற்ருண்டுவிழாவில் தமிழ் நாடு திராவிடர்கழகப்பொதுச் செயலாளர் கடலூர் கி. வீரமணி குறிப்பிட்டார்.

இவ்விழாகருணநிதிபொதுப் பணி மனறத்தினுல ஒழுங்கு செய்யப்பட்டது. மன்றத் தலைவர் திரு. க. நவசோதி தலைமை வகித்தார்.

திரு. கி. வீரமணி தொடர்ந்து உரையாற்றுகையில், "இந்தியாவில் ஒவ்வொரு தபால் முத்திரையும் 30 லட்சம் வரை அச்சிடப்படுவதுண்டு. ஆனுல், பெரியார், நினைவாக வெளியிடப்பட்டுள்ள முத்திரைமட்டும் 50 லட்சம்வெளியாகியுள்ளது. மத்திய அரசு பெரியார் ஈ. வே. ரா. வின்மீது கொண்டுள்ள அபிமானத்தை இது காட்டுகிறது" என்று கூறினுர்.

"தமிழ்நாட்டிலும் ஈரோடிலும், பெரியார் ஈ. வே. ரா. வின் நூற்ருண்டு விழா விரிவானமுறையில் நடைபெறுகின்றபோது, இலங்கை மக்கள் பெரியாரை மறந்துவிடுவார்களோ என்று நான் ஏங்கியதுண்டு. இங்கு பார்க்கும்போது இலங்கை மக்கள் பெரியாரை மறக்கவில்லையென்பது நன்கு தெரிகிறது" என்றும் கூறினுர்.

தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில்; "புலவர் கோவிந்தன் ஒருமுறை நானும் நண்பர் அமிர்தலிங்கமும் தனித்தனியாக அன்பான வரவேற்பளித்தோம். அப்போது எம்மைப் பார்த்துப்புலவர் கோவிந்தன் நீங்கள் இப்படிப் பிரிந்திருந்தால் எப்படித் தமிழினம் ஒற்றுமையாக உரிமையைப்பெறும்? என்று கேள்வி எழுப்பினுர்.

நாம் இன்று இணைந்துவிட்டோம். ஆனுல் நஙகள்தான் பிரிந்திருக்கிறீர்கள். நீங்கள் ஒன்றுபட்டிருந்தால்தான்எமக்குப்பலம். நாம் ஆவரங்காலில்

(5-ம் பக்க பார்க்க)

Melville Assauw Designs

BAYER

விவசாய இரஷாயனப் பொருள்

குரெட்டர் 3% மணிகள்

பாவித்து
நெற்பயிரைத் தாக்கும் இலை
தத்தி உட்பட மற்றும் பூச்சிகளையும்
கட்டுப்படுத்தவும்

தயாரித்து விநியோகிப்போர்

ஹேகெம் லிமிடட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு தொலைபேசி : 9[illegible] - 96331 - 6

## 1962-ல் சீனு ஆக்கிரமித்த 14 ஆயிரம்சதுரமைல் இந்திய மண்:

# பிரச்னைகளை சுமுகமாகத்தீர்த்து இந்தியாவுடன் நல்லுறவு கொள்ள சீனுவிருப்பம்

### சென்னை மரீனுவில் தேசாய் தகவல்

சென்னை, செப். 26

1962ம் ஆண்டின் சீன-இந்திய யுத்தத்தின் போது ஆக்கிரமிக்கப்பட்ட இந்தியப் பிரதேசம் தொடர்பான பிரச்னைகளை சுமுகமான பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்து இந்தியாவுடன் நல்லுறவுகொள்ள சீனு விருப்பம் தெரிவித்துள்ளது. சீனுவின் இவ்விருப்பத்தின் அடிப்படையில் இத்திய வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாய் சீனுவின் அழைப்பை ஏற்று சீனுவுக்கு நட்புறவு விஜயம் ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளார்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் நேற்று சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில்பேசுகையில் கூறினர்.

சென்னை மரீனு கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. தேசாய் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

சீன ஆக்கிரமிப்பின் போது கைப்பற்றப்பட்ட 14 ஆயிரம் சதுரமைல் பரப்பளவைக் கொண்ட இந்திய மண்ணைத் திரும்பவும் பெறுவது தொடர்பான பிரச்னையை நட்புறவுப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துவைக்க சீனு விரும்பியதையடுத்தே இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாய் சீனுவுக்கு வரும்படி விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டார். சீன அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்தாக திரு. வாஜ்பாய் இவ்வருடம் நவம்பர் மாதம் சீனுவுக்கு விஜயம் செய்கிறுர்.

**அண்டைநாடுகளுடன் நல்லுறவு**

பாகிஸ்தான், சீனு உட்பட சகல அண்டை நாடுகளுடனும் இந்தியா நல்லுறவையே விரும்புகிறது என்றும் கூறிய திரு. மொரார்ஜி தேசாய், வெளிநாட்டு அரசு ஒன்றுக்கு இந்தியாவை ஜனதா அரசு விற்றுவிட்டது என்று எழுந்துள்ள குற்றச்சாட்டை வன்மையாகக் கண்டித்தார். (இ)



தேசிய ஹோமியோபதி வைத்தியக் கல்லூரியால் நடாத்தப்பட்ட வைத்தியப் பரீட்சையில் விஷேட சித்தியெய்திய சுன்னுகம் புகையிரத நிலையவீதியைச் சேர்ந்த டாக்டர் ஏ. கந்தசாமிக்கு மேற்படி கல்லூரி நிர்வாகஸ்தர் திருமதி எம். சோமசுந்தரம் பட்டத்திற்கான சான்றிதழ் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். (வண். நிரு.)

## நடுவானில் மோதிய விமானங்கள் நகரின்மத்தியில்விழுந்தன! 140 பேர்பலி!!

கலிபோர்ணியா, செப். 26

அமெரிக்கவிமானம்ஒன்று நடுவானில் இன்னுமொரு விமானத்துடன் மோதி தீப்பற்றி எரிந்த நிலையில் கலிபோர்ணியநகரின் மத்தியில் வீழ்ந்ததையடுத்து 140பேர் பலியாஞர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'போயிங்-737' பிரயாணிகள் விமானம் சந்தியாகோ விமான நிலையத்தில் இறங்குவதற்கு சற்று முன்னர் நடுவானில் விமானம்ஒன்றுடன் மோதி சிதறுண்டது.

அடுத்து விமானத்தின் பகுதிகள் தீப்பற்றி எரிந்து கலிபோர்ணியா நகரின் ஜனசந்தடியுள்ள மக்கள் அதிகம் குடியிருக்கும் பகுதியில் எரிந்து கொண்டே விழுந்தன. இதனுல் நூற்றுக்கணக்கானேர் காயம் அடைந்தனர். கட்டிடம் ஒன்றும் இதனுல் இடிந்து விழுந்ததென்றும் இதன் காரணமாக 80பேர் படுகாயம் அடைந்தனரென்றும் அறிவிக்கப்பட்டது.

## அமெரிக்க பொருளாதாரம் விருத்தி அடைந்தால் உலகபொருளாதாரம்சீரடையும்

### ஜிம்மி கார்ட்டர் கருத்து

வாஷிங்டன், செப். 26

அமெரிக்கப் பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்பட்டால் உலகநாடுகளின் பொருளாதாரநிலை சீரடைந்துவிடும்.

இவ்வாறு அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் தெரிவித்துள்ளார்

195 நாடுகளைச் சேர்ந்த நிதித்துறைத்தலைவர்கள் கலந்து கொண்டமகாநாட்டில் உரைநிகழ்த்துகையிலேயே திரு. கார்ட்டர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது;

பணவீக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், எண்ணை இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதித்து அமெரிக்க டாலரின் பெறுமதியை உறுதியான நிலையில் வைத்திருப்பதன் மூலம் அமெரிக்க பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யமுடியும். இதன் மூலம் உலகநாடுகளின் பொருளாதாரமும் அபிவிருத்தியடையும். (இ)

## இந்த நூற்றுண்டு இறுதியில் 60 கோடி மக்கள் பட்டினியால் பாதிப்புறுவர்

### உலக வங்கித்தலைவர் எச்சரிக்கை

வாஷிங்டன், செப். 26

பட்டினி ஒழிப்புதிட்டத்தை முறையாக அமுல் செய்யாவிட்டால் இந்த நூற்றுண்டு இறுதியில் உலகில் 60 கோடி மக்கள் பட்டினியால் வாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

இவ்வாறு உலக வங்கியின் தலைவர் டாக்டர் மக்னமாரா தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நேற்று ஆரம்பமான சர்வதேச நாணயச் சபையினதும் உலக வங்கியினதும் வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

உலகில் பட்டினி நிலையைப் போக்குவதற்கு பட்டினி ஒழிப்புத் திட்டத்தைத் தீவிரமாக அமுல்செய்வதுடன் நின்றுவிடாது, செல்வந்த நாடுகள் வளர்ந்துவரும் நாடுகளின் அரசாங்கங்களுக்கும் அங்குள்ள தனியார் துறையினருக்கும் உதவிசெய்யவேண்டுமென்றும் அவர் கூறினர். (இ)

### மத்திய அரசு அங்கீகாரம்

சென்னை, செப். 26

தமிழ்நாட்டில் மதுவிலக்கை தீவிரமாக அமுல் செய்யும் தமிழக அரசின் திட்டத்திற்கு மத்திய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. (இ)

### தேவாலய ஆண்டுவிழா

[அரியாலை]

கொழும்பு கால்பேஸ் கிறீஸ்து நாதர் ஆலயத்தின் 125 வது வருட விழாவில் கலந்து கொள்வதற்காக மெனிப்போல நாட்டின் பல்கலைக்கழகத்தலைவர் கலாநிதி றெபேட் டபிள்யூ. டிக்சன் ஐயர் கொழும்பு வந்து சேர்ந்துள்ளார்.

இம்மாதம் 29-ம் 30-ம் திகதிகளில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம பேச்சாளராக இவர் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (அ)




## "ஈழத்தின் தமிழ் சினிமா: தமிழகத்தில் வியப்பு"

(வெள்ளவத்தை)

''கலை, இலக்கியத்துறைகளில் நாம் சிறப்பாக முன்னேறியுள்ளோம். நாடகத்துறையில் உலக நாடகமேடையோடு போட்டியிடும் அளவிற்குத் தரமான நாடகங்களை நாம் மேடையேற்றியுள்ளோம் தமிழ்நாட்டில் நாடகம் சினிமாவாகவே காட்சியளிக்கிறது''

இவ்வாறு தமிழ்நாட்டில் திருப்பூரில் நடைபெற்ற கலை, இலக்கிய மாநாட்டில் கலந்து கொண்டு நாடுதிரும்பிய திரு. அந்தனிஜீவா பேசும்போது குறிப்பிட்டார்.

நாடகம். சினிமா ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் திரு. அந்தனிஜீவாவுக்கு அளித்த பாராட்டு விழா 'சுதர்ஸி' மண்டபத்தில் நடைபெற்றது. விழாவிற்கு நடிகர் மன் குமார் தலைமை வகித்தார்.

திரு. அந்தனிஜீவா மேலும் பேசுகையில், ''தமிழகத்தில் நடைபெறும் கலை, இலக்கிய முயற்சிகளைப்பற்றி நாம் நன்கு தெரிந்து வைத்துள்ளோம். ஆனல் தமிழகத்தவர்களோ நம்மைப் பற்றியும். நமது கலை இலக்கியப் படைப்புகளைப் பற்றியும் அறிய வாய்ப்பில்லாமல் இருக்கிருர்கள்'' என்ருர்.

இலங்கையில் தமிழ்த்திரைப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன என்பது அவர்களுக்கு அதிசயமாக இருக்கிறது என்று கூறிய அவர் ''நமது திரைப் படங்களை பார்க்க அவர்கள் விரும்புகிருர்கள். நமது கலை, இலக்கியப் படைப்புகள் அவர்களை சென்றடைய நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்ருர்.

மற்றும் கலைச்செல்வன், எம். ஏகாம்பரம், ஏ. எஸ். பிலிப், நடிகை ஜெயதேவி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர், (அ)



## புதிய சட்டத்தரணி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயைச் சேர்ந்த செல்வி சுவேந்திரினி இராஜேந்திரம் பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் மற்றும் நீதியரசர்கள் வி. ரி. தாமோதரம், ஐ. எம். இஸ்மாயில், ஆர். எஸ். வனசுந்தரா, ரி. சமரவிக்கிரமா ஆகியோர் முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

முன்னுள் மானிப்பாய் பட்டினசபைத் தலைவரும், யாழ்ப்பாணம் ராஜன் அயன் வேர்க்ஸ் உரிமையாளருமான திரு. சின்னத்தம்பி இராஜேந்திரதினதும் திருமதி சுகுணு இராஜேந்திரத்தினதும் புத்திரியான இவர் உடுவில் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாவார்.

இவர் சட்டக்கல்லூரியில் கல்விபயின்றபோது 77-ம் ஆண்டு கல்லூரி நிர்வாகக் குழுவின் துணைச் செயலாளராகக் கடமையாற்றிஞர்.

## பெரியாரை...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

எடுத்த தீர்மானத்தின்படி, அக்டோபர் 5ந்திகதி தமிழ் மக்களிடையே சாதிகள் இல்லையெனப் பறைசாற்ற உறுதி பூண்டுள்ளோம்.

இதன்மூலமும் இலங்கைத் தமிழ்மக்களும், பெரியார் ஈ. வே. ராவை நினைவுகூருகின்ருர்கள்'' என்ருர். (ம-அ)

## "முற்றவெளி அசம்பாவிதம்: வெட்கக்கேடான செயல்"

-- ஏ. வைத்திலிங்கம்

(யாழ்ப்பாணம்)

'மக்கள் விடுதலை முன்னணியினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். முற்றவெளியில் நடத்திய பகிரங்க பொதுக் கூட்டத்தைக் குழப்பும் நோக்கமாகச் சிலர் நடந்து கொண்டமுறை வெட்கக் கேடானது மாத்திரமல்ல தமிழ் மக்களது பாரம்பரியமான சகிப்புத்தன்மையை பண்பாட்டையும் சீரழிப்பதுமாகும்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ். மாவட்ட பொதுச் செயலாளர் திரு. அ. வைத்திலிங்நம் நேற்று முன்தினம் யாழ். முற்றவெளியில் சிலர் மக்கள் விடுதலை முன்னணிக் கூட்டத்தைக் குழப்பமுயன்றது பற்றி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

இப்படியான வன்முறைகள் மூலம், குழப்புதல்கள் மூலம் ஜனநாயகம் கருத்துக்களைத் தடைசெய்து விடமுடியாது' என்பதை வன்முறையாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இப்படியான சீரழிவு வேலைகளைச் சிலர் திட்டமிட்டே செய்து வருகின்றனர் என்பதற்குக் கடந்த காலங்களில் இப்படியான பகிரங்கக் கூட்டங்கள் குழப்பப்பட்டதே ஓர் உதாரணமாகும்.

இப்படிப்பட்ட ஜனநாயக விரோத, பாஸிசத்தன்மை பொருந்திய அச்சுறுத்தல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்ருேம். அத்துடன் இப்படியான இழிந்த செயல்களுக்கு எதிராக ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள வெகுஜன ஸ்தாபனங்கள் தமது கண்டனத்தைத் தெரிவிக்க முன்வர வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளுகின்ருேம், இவைகளைத் தடுப்பதற்கும் ஆவன செய்ய வேண்டும். (கூ)



புனித ரமழான் பெருநாளை முன்னிட்டு கொழும்பு இஸ்லாமிய அநாதை இல்லத்தில் மூஜாஜி தம்பதிகள் அநாதைக் குழந்தைகளுக்கு உணவு வழங்கித் தாமும் அவர்களுடனிருந்து உணவருந்துவதைப் படத்தில் காணலாம். அநாதை இல்ல மேற்பார்வையாளர் திருமதி லாப்ருேய் அருகில் காணப்படுகிருர்.

## இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 11-ந் திகதி

புதன்கிழமை

(27-9-78)

**மேடம்:-** தொழில்துறையில் நல்ல மாற்றங்கள் ஏற்படக் கூடும், வியாபாரத்துறையில் தொடர்புகள் பெருகும், புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும், சுபதினம்.

**இடபம்:-** உழைப்பினுல் முன்னேற்றம் ஏற்படும், தாய் வழி ஆதரவுக்கும் இடமுண்டு, உயர்கல்வியில் ஈடுபடுவோர்களுக்கு உற்சாகமான தினம்.

**மிதுனம்:-** கண்துடைப்பு வேலை நடைபெறும், கால் நடைகளினுல் நஷ்டமுண்டு, மூத்த சகோதரத்தின் நடவடிக்கை வேதனையைத் தரும், மட்டமான தினம்.

**கடகம்:-** மனப் போராட்டங்களினுல் வேதனைப்படுவீர்கள், அதிக முயற்சி எடுத்தாலும் அற்ப லாபமே கிடைக்கும், முன்னெச்சரிக்கை வேண்டும்.

**சிங்கம்:-** தற்பெருமை மூலம் தடுமாற்றம் தென்படும், பெரியோரை பகைத்துக் கொள்ளாமல் பெருமையை பேணி நடக்கவும், கண்துடைப்பு வேலை நடக்கும், கவனம் செலுத்தவும்.

**கன்னி:-** நீண்டநாள் தலையிடி கொடுத்த பிரச்சனை இன்று நல்ல முடிவுக்கு வரும், இதயத்தை தொடும் சம்பவங்களுக்கு இடமுண்டு, சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

**துலாம்:-** வாழ்க்கையில் புதிய பாதையை உருவாக்குவீர்கள், பரோபகாரச் சிந்தை மேலிடும், உள்ளத்தில் உவகை துள்ளும், அரசினர் ஆதரவும் கிடைக்கும்.

**விருச்சிகம்:-** விஷமிகளின் தொல்லைகள் அதிகரிக்கும், தவருன வதந்திகளை பரப்புவதற்கு சிலர் முற்படுவார்கள், எவரிடத்திலும் அதிக பேச்சை வளர்க்க வேண்டாம், மௌனம் சிறந்த மருந்து.

**தனுசு:-** எதிர்பார்த்த இன்பம் இன்று உங்களை அணைத்துக்கொள்ளும், ஆரம்பத்தில் முட்டுக்கட்டை போட்டவர்கள் இன்று ஆதரவு கொடுப்பார்கள், காதல் ஜோடிகளுக்குப் பொன்னுன தினம்.

**மகரம்:-** அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரலாம், நண்பர்களின் ஆசைவார்த்தைகளில் மயங்க வேண்டாம், நிதானம் வெற்றியைத் தரும்.

**கும்பம்:-** முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும், கொடுத்த வாக்கை காப்பாற்றமுடியாமல் திண்டாடுவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம், அவதானம் நன்று.

**மீனம்:-** கவர்ச்சிகரமான தினம், சில விடயங்களில் நீங்கள் அதிகம் உணர்ச்சி வசப்படுவீர்கள், உள்ளத்தில் இடம்பிடித்துவிட்ட ஒரு ஜீவனின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், அடக்கம் நன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Swhos
Born Black
(Adults Only)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
ஜெய்சங்கர்—ஜெய்சித்திரா
உங்கள்விருப்பம்

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 4-45, 7-15, 10-00
FURY AT SMUGGLERS BAY

வின்ஸர் போன்: 466 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர்.-முத்துராமன்
ஜெயலலிதா-சோ
நடித்த
ஒரு தாய் மக்கள்
(புதிய பிரதி)

REGAL (Jaffna) Phone: 360
Daily 4-30, 7-00,& 9-30 p. m.
Glendo Jackson, Oliver Reed in
THE TRIPLE ECHO
(Color-adults only)

ஶ்ரீதர் (யாழ்ப்பாணம்) கடைசிசில தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயகுமாரி-எஸ்.எஸ்.ஆர்.-தேவிகா
நடித்த
சாந்தி

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஆலயமணி
(புதியபிரதி)

லிடோ போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்) தேன் சிந்துதே வானம்

தினசரி 4 காட்சிகள் 134-வது தினமாக
ராணி சிவாஜி-மஞ்சுளா
(யாழ். நகர்) நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) சிவாஜி - ஜமுனு
இன்று மட்டும் நடித்த
பொம்மைக்கல்யாணம்
[புத்தம் புதிய பிரதி]
28-9-78 முதல் கொஞ்சும் சலங்கை

சாந்தி போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ்ப்பாணம்) நாகேஷ்...ஜெயபாரதி... முத்துராமன்
(இரு வேடங்கள்) K. பாலசந்தரின்
அனுபவி ராஜா அனுபவி
(புதிய பிரதி)
நிதியுதவிக்காட்சி நாகேஷ் நடிக்கும் பாலசந்தரின்
29-9-78 பி.ப. 2-30 "நீர்க்குமிழி"

இலங்கை தயாரிப்பான ஏமாளிகள் 6-ந் திகதி முதல் திரையிடப்படவிருப்பதால் ரசிகர்கள் ஏமாற்றத்தை தவிர்த்துக்கொள்ள இடத்திற்கு முந்துங்கள்.

ராஜா தினசரி 4 காட்சிகள் சிவாஜிகணேசன்
(யாழ்ப்பாணம்) கிரிஜா-கண்ணும்மா
T. R. ராஜகுமாரி S. A. நடராஜன் நடித்த
மனோகரா (புத்தம் புதிய பிரதி)

சத்தியப்பிரமாணம் செய்ததுபோல

# தொகுதி அபிவிருத்தியிலும் ஈடுபட வேண்டும்

## தமிழ் எம்.பி-க்களுக்கு வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்கள் அரசியல் நோக்கத்தைக் கைவிட்டு தத்தம் தொகுதியின் பொருளாதார அபிவிருத்திக்கான நடவடிக்கைகளில் அயராது உழைக்க வேண்டும்.

ஓய்வுபெற்ற நீதியரசர் திரு மாணிக்கவாசகர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்கள் புதிய அரசியல் அமைப்புக்கு விசுவாசம் தெரிவித்து சத்தியப்பிரமாணம் செய்துள்ளதைப் பாராட்டி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் அமைப்புக்கு விசுவாசம் தெரிவித்துள்ளமை சரியான நடவடிக்கையே என்றும் தெரிவித்துள்ள திரு. மாணிக்கவாசகர் தொகுதிமக்களின் நன்மை கருதி கூட்டணி எம். பி க்கள் பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொள்ளும் பட்சத்தில் அது பெரிதும் நன்மை பயக்கும் என்று நம்புகிறேன் என்றும் கூறினர்.

## பாண்டிச்சேரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கரும் வாக்களிக்கவில்லை.

நம்பிக்கை வாக்கெடுப்புக்கு வெற்றி கிடைத்ததைத் தொடர்ந்து, சட்டசபை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கிடையே, இன்று சட்டசபையைக் கூட்டும் லெப்டினன்ட் கவர்னர் குல்கர்ணியின் உத்தரவை எதிர்த்து பாண்டிச்சேரி முதலமைச்சர் திரு. எஸ். இராமசாமி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்திருந்த ரிட்மனு மீதான விசாரணை, ஒரு வார காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## மகளிர் வழிகாட்டிகள் ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மகளிர் வழிகாட்டிகள் சங்கத்தின் வருடாந்த விழா, இன்று யாழ். பழைய பூங்காவில் நடைபெறுகிறது. விழாவுக்கு திரு. இரா. பற்குணம தலைமை வகிப்பார்.

## வீரமணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. விழாவுக்கு திரு. இரா. பற்குணம தலைமை வகிப்பார்.

பெரியார் ஈ. வே. ராவின் தொண்டரும், திராவிடர் கழக செயலாளருமான கடலூர் சி. வீரமணி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுவார். சிறப்புச் சொற்பொழிவுகளை யாழ்ப்பாண எம். பி. திரு. யோகேஸ்வரன், உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், கருணநிதி பொறுப்பணி மன்றத் தலைவர் திரு. க. நவசோதி, திரு. ஆ. பொ. செல்லையா (ஆசிரியர்), வண்ணை ஆனந்தன் உட்பட பலர் உரையாற்றுவர். (செ)

## கிளிநொச்சி சென். திரேசா உற்சவம்

(உருத்திரபுரம்)

கிளிநொச்சி புனித திரேசா ஆலயத்திருநாள் கடந்த 22-ந் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 30-ம் திகதி நற்கருணை ஆராதனையும் மறுநாள் ஒக்டோபர் 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருச்சொருப உற்சவமும் இடம் பெறும்.

ஞாயிறன்று அருட்தந்தை ஜே. பி. தேவராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவைத் தொடர்ந்து விசேஷ கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். இக்கலைவிழாவில் புனித திரேசாள் நாடக சபாவினரால் 'சங்கிலியன்' நாட்டுக்கூத்து மேடையேற்றப்படவுள்ளது. சினிமாஸ் கோப்பில் ஆலய முன்றலில் அமைக்கப் படவிருக்கும் 5 மேடைகளில் சுமரர் 4 மணித்தியாலங்கள் இந்நாட்டுக்கூத்து நடைபெறும்.

இவ்வைபவத்தில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரியும், மன்னார் எம். பி திரு. சூசைதாசனும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (அ)

# "சாதிமுறை இருக்கும்வரை தமிழன் தலைநிமிரமுடியாது"

### -- வடபகுதி வித்தியாதிபதி

(மட்டுவில்)

''தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா என்றெல்லாம் மார்தட்டிக் கொள்ளும் தமிழ் சமுகத்தின் மத்தியிலே, இன்றுசாதியமைப்பின் பெயரால் புரையோடிப் போன சமூகக் குறைபாடுகள் அழியவில்லையே! இதனால் தமிழன் தலை நிமிருவதற்குப் பதில் தலை குனிய வேண்டியவனாயுள்ளான்,''

இவ்வாறு வடமாநில வித்தியாதிபதி திரு. ரி. மாணிக்கவாசகர்சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார். ஏபிரஹாம், சின்னத்தம்பி, ஹன்ட், டிறிபேர்க் ஆகிய இல்லங்களிடையே மகிழம்கேணி மைதானத்தில் கல்லூரி அதிபர் திரு. க. பாலசந்திரன் தலைமையில் இந்த் விளையாட்டுவிழா நடைபெற்றது.

வித்தியாதிபதி திரு. மாணிக்கவாசகர் விழாவில் தொடர்ந்து பேசியதாவது:

''சாதி என்ற நோய் தமிழன் மத்தியிலே புரையோடிப் போயுள்ளது. இதன் காரணமாகத் 'தமிழினமே தலைகுனிய வேண்டிய நிலையிலுள்ளது. இது தமிழினத்திற்கு என்றும் அழியாத அவமானம். 'நாம் அனைவரும் தமிழ்த்தாயின் பிள்ளைகள், எமது மத்தியில் பிரிவினைகள் ஏற்றத்தாழ்வுகள் எதுமே இல்லை' என்ற மனப் பான்மையை நாம் ஏன் வளர்க்கக்கூடாது?

''தீண்டாதார் என்று கூறி ஒரு சாராருக்குப் பாடசாலைகளிலும் அனுமதி மறுக்கப் படுவதாக சிலர் தெரிவித்தனர். வித்தியாதானத்திற்குத் தடைபோடுவது எத்துணை பாவம்!

''தமிழர் கூட்டணித் தலைவர்களான திரு. ஏ. அமிர்தலிங்கம், திரு. மூ. சிவசிதம்பரம், சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் ஆகியோர் என்னிடம் வந்தார்கள். இந்த மாதத்தை சமூகக்குறைபாடு ஒழிப்பு மாதமாகக் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களின் கோரிக்கை மிக நியாயமானதென்பதால் அதனை ஏற்றுக்கொண்டேன்.

ஆசிரிய உலகம் ஒரு புனிதமான உலகம். அதற்குத்தியாக உள்ளம் வேண்டும். பெரும்பாலும் ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு உரிய நேரத்திற்குப் பிந்தியே வருவதாகப் பலர் புகார் செய்துள்ளனர். உண்மையிலேயே இது வருந்தக் கூடிய ஒரு சம்பவம். பாடசாலைகளில் ஆசிரியர்களே குறிப்பிட்ட நேரத்திற்கு முன் வந்து மாணவர்களுக்கு முன் மாதிரி காட்டவேண்டும்.

போட்டியில் ஏபிரஹாம் இல்லம் முதலாம் இடத்தையும், சின்னத்தம்பி இல்லம் இரண்டாம் இடத்தையும், ஹன்ட் இல்லம் மூன்றுவது இடத்தையும் பெற்றன. திரு. மாணிக்கவாசகர் பரிசில்களை வழங்கினார்.

## அவசரகால...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த விபரம் அறிந்த திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா, ''கூச்சலிட்டவரை ஏன் கைதுசெய்ய வேண்டும். அவரை விடுதலை செய்'' என்று பொலிசாரை பணித்தார். அவசரகாலச்சட்டம் முன்னைய அரசின் அரசியல் எதிரிகளை அடக்கவே பயன்படுத்தப் பட்டது'' என்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (ம)

## சம்பந்தமூர்த்தி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராக வேண்டும் என்று மட்டக்களப்பு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி அபேட்சகராக கல்குடாத் தொகுதியில் போட்டியிட்ட திரு. சி. சம்பந்தமூர்த்தி இம்மாதம் 7ம் திகதி புதிய அரசியலமைப்பு பிரகடனம்செய்யப்பட்ட தினத்தன்று இடம்பெற்ற பகிஷ்கரிப்புத் தொடர்பாக கைதுசெய்யுமாறு பிடிவிறுந்து பிறப்பிக்கப்பட்டு, பொலிசாரால் தேடப்பட்டுவந்தததம் கடந்த 22ம் திகதி மட்டக்களப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இவர் சரணடைந்ததும் வாசகர்கள் தெரிந்ததே.

திரு. சம்பந்தமூர்த்தியை இம்மாதம் 26ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் திரு. சி. மனோகரா அன்று உத்தரவிட்டிருந்தார்.

நேற்றுக் காலை இவர் ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்யப்பட்டு மீண்டும் அக்டோபர் மாதம் 23ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டுமென்றும் நீதிபதி உத்தரவிட்டார். (ம)

## பரி. யோவான் தேவாலயத்தில் இன்று

[அரியாலை]

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் ஆதரவில் இன்று சுண்டிக்குளி புனித யோவான் தேவாலயத்தில் நடைபெறும் விசேஷ ஆராதனையில் சிங்கப்பூர் அங்கிலிக்கன் திருமண்டலப் பேராயர் பேரருள் அதிவண சூ பான் இற் அடிகள் 'தூய ஆவியானவரின் கிரியைகள்' என்னும் தலைப்பில் அருளுரை வழங்குவார்.

மாலை 5 மணிக்கு எழுப்புதம் கீதங்களுடன் மேற்படி ஆராதனை ஆரம்பமாகும்.

## யாருடையது?

யாழ். சுபாஸ் கபேக்கு அண்மையில் கிளாஸ் ஹவுஸ் லொறிச் சாரதி பொ. செல்லையா என்பவரால் கண்டெடுக்கப்பட்ட மோட்டார் வர்கன காப்புறுதிப்பத்திரமும் பதிவுப் புத்தகமும் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப்பெற்றுக்கொள்ளவும்.

## புதிய இன விதை உருளைக்கிழங்கு

(யாழ்ப்பாணம்)

ஆஸ்திரேலியா விலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதும், நியாயமான விளைவைக் கொடுக்கக்கூடியதுமான 'டிலவெயர்' என்னும் புதிய இன விதை உருளைக்கிழங்கு தற்பொழுது விவசாய இலாகாவால் விநியோகிக்கப்படுகிறது. இக்கிழங்கைப் பெற விரும்பும் விவசாயிகள், ஒரு கிழமைக்குள் தங்கள் பகுதி விவசாய விரிவாக்க உத்திபோகத்தர் மூலம் கமத்தொழிற் சேவை அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் இதனைப் பெற்றுக்கொள்ளப் பதிவுசெய்யலாமென்று யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க அதிபர் அறிவித்துள்ளார்.

சொத்துரிமை கோரி

## பருத்தித்துறை கோர்ட்டில் ஜேர்மனியர் வழக்கு

(கரணவாய்)

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பிரிட்ஸ் ஜுங் என்பவர், 1811ம் ஆண்டில் பருத்தித்துறையில் நீதிபதியாகக் கடமையாற்றிய தமது மூதாதை ஒருவரின் சொத்துக்களுக்கு உரிமை கோரிப் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

மேற்கு ஜெர்மனிவைச் சேர்ந்த தமது மூதாதையரான எரி மற்பீல்ட் என்பவர் 1811ல் பருத்தித்துறையில் நீதிபதியாகக் கடமையாற்றியதாகவும், அவர் இறக்கையில் 636 பவுண் பெறுமதியான சொத்துக்களை, இலங்கையிலுள்ள முகவர் ஒருவர் மூலம் லண்டன் வங்கியில் இடப்பட்டிருந்ததாகவும், குறிப்பிட்ட தொகை தமக்குத் தரப்படவேண்டுமெனவும் திரு. ஜுல் தமது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இவரின் மனு மீதான விசாரணை, பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. எம். டி. யேசுரத்தினம் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது, இத்தொகை லண்டன் வங்கிக்கு மாற்றப்பட்டிருப்பதனாலும், இறந்தவரின் மரண சாசனம் தெளிவற்றிருப்பதனாலும் இடைக்காலக் கட்டளை உத்தரவை மேற்கு ஜெர்மன் நாட்டுப் பத்திரிகைகளில் வெளியிட்டு, குறிப்பிட்ட காலஎல்லைக்குள் யாராவது ஆட்சேபனை தெரிவிக்காதபட்சத்தில் குறிப்பிட்ட தொகையை மனுதாரருக்கு வழங்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மனுதாரரான ஜெர்மனியரின் சார்பில் சட்டத்தரணி கே. நாராயணசாமியின் அனுசரணையுடன் சட்டத்தரணி என். கனகசுந்தரம் ஆஜராகியிருந்தார். (அ)

## நல்லூர்த் திருவிழா இந்தப் பொருட்கள் யாருடையது?

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கந்தசுவாமிகோவில் உற்சவகாலத்தில் தவறவிடப்பட்ட பல பொருட்களை யாழ். பொலிஸ்நிலையத்தில் தகுந்த ஆதாரம்காட்டி பெற்றுக்கொள்ளும்படி நல்லூரில் அமைந்ததற்காலிகப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் பத்திரிகைக்கு விடுத்த அறிவித்தலின்படி இன்றுவரை எவரும் உரிமை கோரப்படாது பின்வரும் பொருள்கள் யாழ். பொலிஸ்நிலையத்தில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் அணியும் இரு கைக்கடிகாரங்கள், ஒரு பஞ்சாயுதம், ஒரு ஐப்சி, ஒரு மூக்குச்சி, ஐந்து பணப்பை, ஒரு சேர்ட் ஆகியவை. [ஊ]

## ஜனாதிபதி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

''வேலைநீக்கம், கதவடைப்பு பழிவாங்கல் போன்ற நடவடிக்கைகளை எதிர்த்துப் போராட அரச தொழிலாள வர்க்கத்தின் ஒன்றுபட்ட நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவது கடினம். எனவே அடையாளவேலை நிறுத்த ஒத்திவைப்பு தீர்மானத்தை மேற்கொண்டு, அரசாங்க. டய முறுத்தலுக்கு எதிராகப் போராடுவதற்கும் தொழிலாளர்களைத் திரட்டுவதற்கும் தயாராகின்றோம்'' என்று கூட்டுக் கமிட்டியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அக்கா...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

சகோதரிகள், தந்தை, மா. தம்பிப்பிள்ளை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். ஜி. லூதர் ஆகியோரது சாட்சியங்களைப் பதிவு செய்த மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். (இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தார ால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

The Eelanaadu PostBox 49, Telegram Eelanaadu, Telephone 389. Registered as a Newspaper in Srilanka.